# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

| தரம் : 11 | வரலாறு | நேரம் : 1.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் .................................................... | |

## பகுதி - I

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
இவ் வினாக்களுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

* 01 - 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

01. இலங்கையின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகத் தருகின்ற மகாவம்சம் என்ற நூலை எழுதிய மகாநாம தேரர் வசித்த பிரிவேனா
   1) திக்சந்த செனவியா பிரிவேனா   2) பெப்பிலியானே சுனேந்திராதேவி பிரிவேனா
   3) காரகல பத்மாவதி பிரிவேனா   4) வீதாகம கணானந்த பிரிவேனா

02. இலங்கையில் வரலாற்றிற்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த தாழ்நில உலர்வலய வெட்ட வெளிப் பாசறை ஒன்றின் பெயர்
   1) பாகியன்கல   2) பண்டாரவளை
   3) பெல்லன்பதி பெலஸ்ஸ   4) மினிஹாகல்கந்த

03. யோத கால்வாய், பப்பதன்ன கால்வாய் போன்றவற்றை அமைத்த மன்னர்கள் முறையே
   1) தாதுசேனன், வசபன்   2) தாதுசேனன், மகாசேனன்
   3) மகாசேனன், 1ம் அக்போ   4) வசபன், பண்டுகாபயன்

04. பின்வரும் சோடிப் பதங்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத சோடி
   1) புத்ததாஸ - நாடெங்கிலும் வைத்தியசாலைகளை அமைத்தான்.
   2) 1 ஆம் உபதிஸ்ஸ - பிரசவ விடுதிகளை அமைத்தான்.
   3) 5 ஆம் மகிந்தன் - வைத்தியசாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கினான்.
   4) பண்டுகாபயன் - உபசக்கரோகநாச என்று அழைக்கப்பட்ட வைத்தியசாலைகளை அமைத்தான்.

05. துட்டகைமுனு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வு
   1) தந்தையான காவன்தீசனின் வழிகாட்டலின்படி நடந்து கொண்டமை.
   2) ருவன்வெலிசாயா உட்பட பல விகாரைகளைக் கட்டியமை.
   3) அரசியல் பாதுகாப்புக் கருதி அயல் நாடுகளுடன் நல்லுறவினைப் பேணியமை.
   4) வேகமாக வளர்ச்சியுற்று வந்த இந்து சமுத்திர வியாபார நடவடிக்கைகளிலிருந்து அதிகளவு இலாபத்தினை பெற்று வந்த மாந்தை சர்வதேச துறைமுகத்தை அநுராதபுர ஆட்சியாளனிடம் இருந்து மீட்டெடுத்தமை.

06. இலங்கையில் மரப்பலகை செதுக்கல் கலைக்குப் பிரசித்தி பெற்ற இடம்
   1) ருவான்வெலிசாய   2) சிகிரியா
   3) எம்பக்க தேவாலயம்   4) ஜேத்தவனராமய



kalvi.lk

07. நிரல் I இல் கிராமங்களும் நிரல் II இல் அவற்றின் பண்புகளும் தரப்படுகின்றன. அவற்றைத் தொடர்பு படுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) ஒலகம் | A. துறைமுகத்தை அண்டிய கிராமம் |
| 2) பட்டானகாம | B. வர்த்தக கிராமம் |
| 3) நியம்கம | C. வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம் |
| 4) பரிகித்தகம | D. கைவிடப்பட்ட குளக் கிராமம் |

1) DCBA 2) DABC 3) ADBC 4) BACD

08. பனாகடுவ செப்பு சாசனத்தில் அநுராதபுரத்தை குறிக்க பயன்படுத்தப்பட்ட பெயர்
1) லங்கா பட்டுண 2) கிராமிக
3) நுருபுரம் 4) ஜனநாதபுரம்

09. இலங்கையில் முதன் முதலாகப் பாரிய அளவிலான குளங்கள் அமைக்கும் பணியை ஆரம்பித்த மன்னன்
1) சத்தாதிஸ்ஸன் 2) வசப மன்னன்
3) மகாசேனன் 4) தாதுசேனன்

10. தேவநம்பியதீசனின் முடிசூட்டு விழாவுக்கு அசோகனால் அனுப்பப்பட்ட பஞ்ச வஸ்துக்களின் தொகுதி
1) பாதணி, நெற்றிப்பட்டம், சாமரை, ஆலவட்டம், வீணை
2) மேளம், வீணை, நாதஸ்வரம், சங்கு, ஆலவட்டம்
3) வீணை, மேளம், நாதஸ்வரம், சங்கு, நெற்றிப்பட்டம்
4) ஆலவட்டம், சாமரை, பாதணிகள், மங்கள வாள், நெற்றிப்பட்டம்

11. பத்தினி தெய்வத்தின் விழாவிற்கு தென்னிந்திய சேர இராச்சியத்திற்கு சென்ற அநுராதபுர ஆட்சியாளன்
1) 1 ஆம் கஜபாகு 2) பண்டுகாபயன்
3) தேவநம்பியதீசன் 4) எல்லாளன்

12. சேனையை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கம்புகளால் கட்டப்பட்ட வேலி
1) தண்டுவெட்ட 2) பெல
3) கனத்த 4) நவதெனிசேனை

13. பண்டித பராக்கிரமபாகு என அழைக்கப்பட்ட மன்னன்
1) 1 ஆம் பராக்கிரமபாகு 2) 2 ஆம் பராக்கிரமபாகு
3) 4 ஆம் பராக்கிரமபாகு 4) 6 ஆம் பராக்கிரமபாகு

14. கண்டி இராச்சியத்தில் பிரதானி வம்சத்திலிருந்து மன்னனாக வந்தவன்
1) 1 ஆம் விமல தர்மசூரியன் 2) கரலியத்த பண்டார
3) யமசிங்க பண்டாரா 4) ஸ்ரீவிஜயராஜசிங்கன்

15. கண்டி இராசதானியில் நெசவு வரி, வனைதல் வரி, போக்குவரத்து வரிகளை குறிக்கப் பயன்படும் சொற்பிரயோகம்
1) ரீபத்த, குருவேபத்த, ஹெந்த பத்த 2) ஹெந்தபத்த, படஹெலபத்த, மடிகேபத்த
3) குருவேபத்த. படஹெலபத்த, ரீபத்த 4) மடிகேபத்த, குருவேபத்த, படஹெலபத்த

16. மறுமலர்ச்சி யுகத்தில் சிறந்த கலைஞராகவும், விஞ்ஞானியாகவும், பொறியியலாளராகவும் விளங்கியவர்
1) மைக்கல் ஆஞ்சலோ 2) லியானாடோ டாவின்சி
3) ரிரியன் 4) ராபேல்

17. 1619ல் யாழ்ப்பாணம் மீது படையெடுத்த போர்த்துக்கேய தளபதி
1) ஜெனரல் கொன்ஸ் தாந்திசூசா 2) பிலிப் த ஒலிவேரா
3) அல்மேடா 4) அசவேது

18. கண்டி இராச்சியத்தின் இறுதி சிங்கள மன்னன்
1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 2) விக்கிரம இராஜசிங்கன்
3) வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் 4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்



kalvi.lk

19. * நான்காம் புவனேகபாகு மன்னனால் தலைநகராக்கப்பட்டது.
* பிரபுக்கள் குடும்பம் செல்வாக்கு மிக்கதாகக் காணப்பட்டது.
* தாய்வழி அரசுரிமை வழங்கப்பட்டது.
மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய இராசதானி
1) யாப்பகுவா 2) தம்பதெனியா
3) கோட்டை 4) கம்பளை

20. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற மேலைத்தேசத்தவர்கள் இலங்கையில் வந்திறங்கிய துறைமுகங்கள் முறையே
1) திருகோணமலை, காலி, மட்டக்களப்பு 2) மட்டக்களப்பு, திருகோணமலை, காலி
3) காலி, மட்டக்களப்பு, திருகோணமலை 4) திருகோணமலை, மட்டக்களப்பு, காலி

*** பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 21, 22ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - இரும்புத்தாது உருக்குதல். B - ரோலர் இயந்திரம்
C - நீராவி இயந்திரம் D - புகைப்படகு
E - தந்திமுறை F - பாதுகாப்பு விளக்கு

21. நிலக்கரிக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத்தொகுதி
1) CF 2) AF 3) FD 4) AB

22. இரும்புக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத்தொகுதி
1) AC 2) FE 3) AB 4) CD

23. இலங்கை வரலாற்று ரீதியில் முக்கியம் பெறுவதில் செல்வாக்கு செலுத்திய புவியியல் காரணி
1) ஓடைத்துறைகளைக்கொண்டிருந்தமை. 2) பட்டுப் பாதையில் அமைந்திருத்தல்.
3) இலங்கையில் பல் இன மக்கள் வாழ்ந்தமை. 4) இலங்கை தீவாக அமைத்திருந்தமை.

*** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A - J வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 24, 25 வினாக்களுக்கு விடை தருக.**

| வருடம் | பிரித்தானிய ஆளுநர்கள் | தொடர்புடையவை |
|---|---|---|
| A - 1802<br>B - 1818<br>C - 1848 | D - றொபேட் பிறவுன்றிக்<br>E - பிரட்டிக் நோர்த்<br>F - டொறிங்டன் பிரபு | G - பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி<br>H - கொங்காலே கொட பண்டா<br>I - எகலப்பொல<br>J - கெப்பற்றிப்பொல |

24. இலங்கையின் கரையோரப் பகுதியில் இரட்டை ஆட்சியுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய தொகுதி
1) ADH 2) BFJ 3) AEG 4) CFI

25. பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய விடைத் தொகுதி
1) AFG 2) BEI 3) CEH 4) BFJ

*** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A - I வரையான தகவல்களைப் பயன்படுத்தி 26, 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| தலைவர்கள் | அரசியல் கட்சி | உருவாக்கப்படட காலம் |
|---|---|---|
| A. S.W.R.D. பண்டாரநாயக்க<br>B. D.S. சேனாநாயக்க<br>C. கொல்வின் R.D. சில்வா | D. இலங்கை சமசமாஜ கட்சி<br>E. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி<br>F. ஐக்கிய தேசியக்கட்சி | G. 1946<br>H. 1951<br>I. 1935 |

26. சுதந்திர இலங்கையின் உருவாக்கத்திற்கும் முதலாவது பிரதமர் தலைமையிலான அமைச்சரவை உருவாக்கத்துக்கும் காரணமான சம்பவங்களின் விடைத் தொகுதி
1) AEI 2) BFG 3) CFI 4) AEH



kalvi.lk

27. இலங்கை இடது சாரித் தலைவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி பற்றிய தகவல்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி

1) ADG 2) BFH 3) ADH 4) CDI

* **சுதந்திரத்திற்கு முன் உருவாக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின் அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினைக் கொண்டு 28, 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A. முதன்முதலில் சட்டவாக்கக் கழகம் உருவாக்கப்படல்.
B. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டமை.
C. மாகாண ரீதியான தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டமை.
D. இரு சபை கொண்ட பாராளுமன்றம் உருவாகியமை.
E. அரசின் வர்த்தக ஏகபோக தனியுரிமை இல்லாதொழித்தல்.

28. மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் கோல்புறூக் அரசியல் திட்டத்துடன் தொடர்புடைய விடைத்தொகுதி

1) BC 2) AE 3) DE 4) EC

29. இலங்கையில் பாராளுமன்றம் உருவாகக் காரணமாக இரு சம்பவங்களை உள்ளடக்கும் விடைத்தொகுதி

1) AB 2) AD 3) CD 4) DE

* **இலங்கையில் 1972 (1வது குடியரசு யாப்பு), 1978 (II குடியரசு யாப்பு) அரசியல் சீர்திருத்த அம்சங்கள் கிழே தரப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 30, 31ம் வினாக்களுக்கு விடை தருக.**

A. பெயரளவு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை
B. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு எனப்பட்டது.
C. சட்டசபை தேசிய அரசுப் பேரவையாக மாற்றம் பெறல்.
D. சுயாதீன நீதிமன்ற தொகுதி
E. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அறிமுகம்.

30. இலங்கையின் முதலாவது குடியரசு யாப்புடன் தொடர்புடைய அம்சங்கள்

1) AD 2) AC 3) CE 4) AC

31. 1978ம் ஆண்டு யாப்புடன் தொடர்புடைய அம்சங்கள் அடங்கிய விடைத் தொகுதி

1) BE 2) AB 3) AC 4) CE

* **32 - 34 வரையான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் வரவேண்டிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.**

32. 1919 இல் இலங்கை தேசிய சங்கம் ......................................................... என்பவரால் உருவாக்கப்பட்டது.

1) சேர். பொன் இராமநாதன் 2) சேர். பொன் அருணாசலம்
3) தந்தை செல்வா 4) G.G. பொன்னம்பலம்

33. இலங்கை வரலாற்றில் கோட்டை சிங்கம் எனப் புகழப்பட்ட விடுதலை வீரர் ................................ ஆவார்.

1) E.W. பெரேரோ 2) D.P. ஜயதிலக
3) A.E. குணசிங்க 4) வலிசிங்க ஹரிச்சந்திர

34. 1965 பொதுத் தேர்தலில் நான்காவது முறையாக ...................... கட்சியிலிருந்து டட்லி சேனாநாயக்கா பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

1) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 2) ஐக்கிய தேசியக் கட்சி
3) சமசமாஜகட்சி 4) தமிழரசுக் கட்சி



kalvi.lk

* **கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகள் ஒவ்வொன்றையும் வாசித்து 35, 36, 37 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | | |
|---|---|---|
| A. | *1. கல்லோயா அபிவிருத்தித் திட்டம்* | *2.* D.S. *சேனாநாயக்க* |
| B. | *1. சிங்கள, முஸ்லீம் கலவரம்* | *2. ரொபட் சார்மஸ்* |
| C. | 1. C.W.W. *கன்னங்கர* | *2. இலவசக் கல்வி* |
| D. | 1. 1815 *ஒப்பந்தம்* | *2. 1797 கலகம்* |

*35. முதலாவது திட்டத்தின் வெற்றிக்கு காரணமான இரண்டாவது விடயத்தைக் குறிக்கும் சரியான விடைச் சோடி*

*1)* A *2)* B *3)* C *4)* D

*36. முதலாவது விடயத்தினை முடிவுக்கு கொண்டு வந்ததில் பங்காற்றிய இரண்டாவது விடயம் அடங்கிய சோடி*

*1)* A *2)* C *3)* D *4)* B

*37. முதலாவதற்கும், இரண்டாவதற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடித் தொகுதி*

*1)* B *2)* A *3)* D *4)* C

* **கீழே தரப்பட்டுள்ள A, B கூற்றுக்களின் அடிப்படையில் 38, 39ம் வினாக்களுக்கு விடை தருக.**

A. *பேள் துறைமுகம் தாக்கப்படல்.*

B. *போலந்து கைப்பற்றப்படல்.*

*38. 1ம் உலக யுத்தத்துடன் தொடர்புடைய சரியான கூற்று*

*1)* A *சரியானது* B *சரியானது.* *2)* A*யும்* B*யும் சரியானது.*

*3)* A *பிழையானது* B *பிழையானது.* *4)* A *சரியானது* B *பிழையானது.*

*39. இரண்டாம் உலக யுத்தம் ஏற்படக் காரணமான கூற்று*

*1)* A*யும்* B*யும் சரியானது.* *2)* A*யும்* B*யும் பிழையானது.*

*3)* A *பிழையானது* B *சரியானது.* *4)* A *சரியானது* B *பிழையானது*

* **கீழே தரப்பட்டுள்ள A, B, C அகிய கூற்றுக்களை வாசித்து 40ம் வினாவுக்கு விடை தருக.**

A. *பொஸ்டன் தேனீர் விருந்து*

B. *பிரதி நிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை.*

C. *சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்*

*40. 1776 இல் அமெரிக்க சுதந்திரப் போருடன் தொடர்புடையது பற்றிய சரியான விடை*

*1)* A*யும்* B*யும் தவறானவை.* *2)* A*யும்* B*யும் சரியானவை.*

*3)* A*யும்* C*யும் சரயானவை.* *4)* B*யும்* C*யும் சரியானவை*

(40 x 2= 80 *புள்ளிகள்)*



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

**தரம் : 11** **வரலாறு**

## விடைகள்
### பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 1 | 02) 3 | 03) 2 | 04) 4 | 05) 4 |
| 06) 3 | 07) 2 | 08) 3 | 09) 2 | 10) 4 |
| 11) 1 | 12) 1 | 13) 3 | 14) 2 | 15) 2 |
| 16) 2 | 17) 2 | 18) 4 | 19) 4 | 20) 3 |
| 21) 1 | 22) 3 | 23) 4 | 24) 3 | 25) 4 |
| 26) 2 | 27) 4 | 28) 2 | 29) 2 | 30) 2 |
| 31) 1 | 32) 2 | 33) 1 | 34) 2 | 35) 1 |
| 36) 4 | 37) 3 | 38) 3 | 39) 3 | 40) 2 |

(40 X 2 = 80 Marks)

`

### பகுதி - II

*01. அ)*

*ஆ) 1)* A - *துட்டகைமுனு* B - S.W.R.D *பண்டாரநாயக்க*
C - J.R. *ஜெயவர்த்தனா* D - *வின்சன் சேர்ச்சில்* *(04 புள்ளிகள்)*

*2)* *1) அடோல்ப் ஹிட்லர்* *2) ஆஸ்திரியா*
*3) நாசிச வாதம்* *4) எனது போராட்டம்* (Main - Kampt)
*(04 புள்ளிகள்)*

*3)* *1) குதிரைத் தலையும், மனிதனும்.*
*2) இசுறுமுனி விகாரை*
*3) தேவநம்பியதீசன்*
*4) குதிரைத் தலை - அக்கினித் தெய்வம்*
*மனிதன் - பர்ஜன் என்னும் தெய்வம்* *(04 புள்ளிகள்)*

*02. 1)* A - *எல்லங்காவ* B - *கோகர்ண / திருகோணமலை* C - *ஹதிஅதெக*

*2)* A - *வசபன்* B - *இரண்டாம் பராக்கிரமபாகு*
C - *நிஸங்க மல்லன்* D - *பண்டுகாபயன்*

*3) 1) கிராமத்தவர்களுடன் நல்லுறவைப் பேணல்.*
*2) கிராமத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்தல்.*
*3) கிராம குளங்களை நிர்வகித்தல்.*
*4) கிராமங்களிடையே பண்டப் பரிமாற்றத்தை ஏற்படுத்தல்.*
*5) கிராமத்திலுள்ள ஏழைகளிற்கு உதவுதல்.*

*(2 விளக்கம் - 02 புள்ளிகள்*
*2 விளக்கம் - 03 புள்ளிகள்)*

*4) 1) திட்டமிட்டு சோழர் ஆட்சியிலிருந்து இலங்கையினை மீட்டல்.*
*2) முழு இலங்கையையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வருதல்.*
*3) பொலநறுவையை நாட்டின் தலைநகரமாகத் தெரிவு செய்தல்.*

*( 3 விடயம் - 03 புள்ளிகள்*
*3 விளக்கம் - 03 புள்ளிகள்)*



kalvi.lk

03. 1) A - ஹோபிட்டிகம தூண் கல்வெட்டு / சொரபொரவாவி தூண் கல்வெட்டு / பதுளை தூண் கல்வெட்டு
B - வல்லிபுரம் பொற்சாசனம்
C - கெத

2) A - ததவய B - தூலதார C - மணிகர D - தடிக

3) **1) உள்நாட்டு வர்த்தகம்**
1) அநுராதபுரம், மகாகமம், வர்த்தக நகரங்களாகக் காணப்பட்டமை.
2) வர்த்தக சங்கங்கள் நியமஸ்தான என குறிப்பிடப்பட்டமை.
3) 3 ஆம் உதயனின் வர்த்தக சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டம்.

**2) வெளிநாட்டு வர்த்தகம்**
1) ஆப்கானிஸ்தானிலிருந்து வெளிநாட்டு வர்த்தகர்கள் வருகை தந்தமை.
2) இலங்கையின் அமைவிடம் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு காரணமானமை.
3) மாந்தை சர்வதேச துறைமுகமாக விளங்கியமை.

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) **1) கல்வி**
1) பரம்பரையான முறையில் அறிவு பரிமாறப்பட்டமை.
2) ஆசிரியர்கள் ஆசார்ய என கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டமை.
3) விகாரைகள் கல்வி வழங்கும் நிறுவனங்களாக விளங்கியமை.

**2) இலக்கியம்**
1) சிகிரிய பளிங்கு சுவர் கவிதை
2) சுற்றாடல் சார்ந்த கவிதைகள்.
3) உலக நிலையாமை தொடர்பான கவிதைகள்

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

04. 1) 1) களிமண் ஓட புராதன கல்லறை. 2) வீடமைப்பு தொழில்நுட்பம்
3) மட்பாண்டம் தயாரிப்பு

2) A - அலைதாங்கி B - குளக்கட்டு
C - மடைக்கதவு D - கலிங்கல் தொட்டி

3) 1) வசபமன்னனின் சுரங்க வழி கால்வாய்.
2) குட்டம், பொய்கை, தாமரை பொய்கை, யானைப் பொய்கையின் நிர்மாணம்
3) தாதுசேனனின் யோத கால்வாய்
4) வசபனின் எலகர கால்வாய்
5) மினிப்பே கால்வாய்

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) 1) பண்டுகாபயன் அநுராதபுர நகர நிர்மாணத்தில் மேற்கொண்ட நுட்பம்
a - எல்லைகளை வகுத்தல்.
b - அகழிகளை அமைத்தல்.
c - நகர வீதிகளை அமைத்தல்.
D - நகர எல்லைகளில் வாயில்களை அமைத்தல்.

2) காசியப்பன் சிகிரிய பூங்கா
சிகிரிய ஓவியங்கள், குளிக்கும் தடாகம், பூங்கா, அரசமண்டபம், நடன அரங்கு, பாதுகாப்பு மதில், அகழிகள் அமைத்தல், அழகிய பூங்கா

(2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 04 புள்ளிகள்)



kalvi.lk

05. 1) A - கொன்ஸ்தாந்திநோபிள் B - போர்த்துக்கல் / ஸ்பெயின்
C - சீதாவாக்கை

2) 1) A - 1ம் விமலதர்மசூரியன் B - 2ம் இராஜசிங்கன்
2) A - பேருலோபேஸ் த சூசா B - கொன்ஸ்தைன் டி சூசா

3) 1) சீதாவாக்கை இராசதானி அடிக்கடி போர்த்துக்கேயருக்கு எதிராக போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
2) 1ம் இராஜசிங்கன் பின்பற்றிய தூரநோக்கற்ற கொள்கை.
3) 1ம் இராஜசிங்கனிற்கு பின்னர் இராச்சியத்தினை நிர்வகிக்க பொருத்தமான அரசர்கள் இல்லாமை

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) **1638 உடன்படிக்கை**
1) ஒல்லாந்தருக்கு ஏற்படும் போர்ச் செலவை பணம், பொருட்கள் மூலம் செலுத்தப்படுதல்.
2) கண்டி இராச்சிய வர்த்தகப் பொருட்களின் ஏகபோக உரிமை ஒல்லாந்தருக்கு வழங்கப்படுதல்.
3) போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளை தம்வசம் வைத்திருத்தல்.

**1776 உடன்படிக்கை**
1) கரையோரப் பகுதிகளில் ஆதிக்கம்.
2) வர்த்தகப் பொருட்கள் பெறுதல்.
3) கடற்கரையை உரிமையாக்குதல்.

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 04 புள்ளிகள்)

06. 1) A - இராஜாதி இராஜசிங்கன் B - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
C - ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன்

2) 1) வரியை அறவிட சுதேச உத்தியோகத்தர்களை நியமித்தல்.
2) புதிய வரிகள் நீக்கப்படுதல்.
3) வரிவசூலிப்பதற்கும் நீதி வழங்குவதற்கும் வெவ்வேறு உத்தியோகத்தர் நியமனம்.
4) ஒல்லாந்தரின் நீதிமன்ற முறை

3) 1) கண்டியின் வர்த்தகப் பொருட்களை பெற்றுக்கொள்ளல்.
2) கொழும்பிலிருந்து திருகோணமலையூடாக போக்குவரத்துப் பாதை அமைக்க மலையகம் தடையாக இருந்தது.
3) எல்லைகளில் பாதுகாப்பு படையினரை வைத்திருப்பதானல் ஏற்படும் செலவினைக் குறைத்தல்.
4) சுதந்திர அரசாக கண்டி இராச்சியம் அமைந்திருப்பது பிரித்தானியருக்கு தடையாக இருந்தமை.

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) 1) மலையகத்தின் இயற்கையான அமைவிடம்
2) மலையக மக்கள் பின்பற்றிய கொரில்லா பேர் முறை.
3) மலையக மன்னனுக்கு கண்டி மக்கள், பிரதானிகள் மதகுருமாரிடம் இருந்து கிடைத்த ஆதரவு.
4) காலநிலை
5) பாதை பற்றிய அறிவு பிரித்தானியரிடம் காணப்படாமை.

( 3 விடயம் - 03 புள்ளிகள்
3 விளக்கம் - 03 புள்ளிகள்)



kalvi.lk

07. 1) கொழும்பு, குருநாகல், சிலாபம்

2) A - வில்லியம் கோபல்லாவ | B - D. S. சேனாநாயக்கா
C - ஸ்ரீமாவோ பாண்டாரநாயக்கா | D - S.W.R.D. பண்டாரநாயக்கா

3) 1) ஆளுநர்நாயகம் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது.
2) இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.
3) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை.
4) நீதிச் செயற்பாடுகள்

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) 1) கோல்புறூக் கமரன் யாப்பு சீர்திருத்தம்.
2) அரச ஆதரவு கிடைக்கப் பெற்றமை.
3) உட்கட்டமைப்பு வசதிகளின் அதிகரிப்பு.
4) தென்னிந்தியாவிலிருந்து கிடைத்த கூலித்தொழிலாளர்கள்.
5) தரிசு நிலச் சட்டம்.

( 3 விடயம் - 03 புள்ளிகள்
3 விளக்கம் - 03 புள்ளிகள்)

08. 1) A - தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர்

2) A - ஹம்றிடேவி | B - ஜோர்ஜ்ஸ்டீவன்ஸ்
C - டெம்ளர் | D - மார்க்கோனி

3) 1) பாரிய விவசாய பண்ணைகள் உருவாகியமை.
2) சுறழ்சிமுறை, நிலமாற்று முறை பயிர்ச்செய்கை
3) நவீன உபகரணப் பயன்பாடு.

( 2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) 1) போதுமான கனியவளம்.
2) வளர்ச்சியடைந்த வர்த்தக சந்தை
3) அரசியல் உறுதிப்பாடு.
4) சுதந்திரமான சமூக, பொருளாதாரப் பின்னணி.

(3 விடயம் - 03 புள்ளிகள்
3 விளக்கம் - 03 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

09. 1) A - அமெரிக்க சுதந்திரப் போர் | B - பிரான்சியப்புரட்சி | C - ரஷ்ய புரட்சி

2) A - ஓட்டோமன் பிஸ்மார்க் | B - லொஜிட் ஜோர்ஜ்
C - ஹிரோஹித்தோ | D - பிராங்கிளின் ரூஸ்வெல்ட்

3) 1) ஜேர்மனியின் ஐக்கியத்தின் போது பிரான்சும் ஜேர்மனியும் பகைமை கொண்டமை.
2) ஜேர்மனியின் பேரரசன் 2 ஆம் வில்லியத்தின் செயற்பாடு.
3) குடியேற்றங்கள் குறித்த போட்டி.
4) பிரான்சை தனிமைப்படுத்த பிஸ்மார்க் பின்பற்றிய கொள்கை.
5) ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை.

(2 விடயம் - 02 புள்ளிகள்
2 விளக்கம் - 03 புள்ளிகள்)

4) **முதலாம் உலக யுத்தம்**
1) வேல்சேல்ஸ் உடன்படிக்கை
2) அச்சுநாடுகள் தோல்வியடைந்தமையும் நேசநாடுகள் வெற்றி பெற்றமையும்.
3) மனித உயிர்களும் சொத்துக்களும் அழிவடைந்தமை

**இரண்டாம உலக யுத்தம்**
1) ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் தோல்வியடைந்தமை.
2) 50 மில்லியனுக்கும் அதிகமான மனித உயிர்களும் சொத்துக்கள், செல்வங்களும் அழிவடைந்தமை.
3) அணுகுண்டு பாவனையில் யப்பானில் எதிர்காலத்தில் பயங்கரமான விளைவுகள் ஏற்பட்டமை.
4) ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்றமை.
5) மார்ஷல் திட்டம் உருவாக்கப்பட்டமை.

(2 விடயம் - 03 புள்ளிகள்
2 விளக்கம் - 04 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாந் தவணைப் பரீட்சை - 2016

| தரம் : 11 | வரலாறு - II | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

☞ **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.**

☞ **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்குப் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

☞ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

**(01)**

அ. வழங்கப்பட்டுள்ள இலங்கைப்புற உருவப்படத்தில் (i)இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும், வழங்கப்பட்டுள்ள உலகப்புற படத்தில் (ii) இன் கீழ்த் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) கலாஓயா, மகாவாலுகாகம, தம்பதெனியா, மகாதித்த, சிகிரியா, வல்லிபுரம், கலாவாவி, காலி, ரிதிபெத்திஅணை,மினிஹாகல்கந்த, பாகியன்கல, காசாதோட்ட **(12 புள்ளி)**

(ii) ஹவாய்த்தீவு, கம்போடியா, யப்பான், புளோரன்ஸ், மகலன் தொடுகடல், சுயெஸ் கால்வாய். **(06 புள்ளி)**

ஆ. (i) கீழே ABCD ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக் கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

**A** - இலங்கையின் அரசியல் அதிகாரம் முறையான விதத்தில் உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த மன்னன்.

**B** - 1951 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நிறுவியவர்.

**C** - இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி.


**D** - இரண்டாம் உலகமகாயுத்தில் பங்குபற்றிய பிரித்தானியப் பிரதமர். **(04 புள்ளி)**

☞ **A, B ஆகிய உருக்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக்கிரமமாக விடைத்தாளில் எழுதுக.**



(ii) 1. உரு A யில் காணப்படும் நபரின்பெயரைத் தருக?
2. இவரது தாய் நாடு?
3. இவர் கடைப்பிடித்த அரசியல் கொள்கை.
4. இவரால் எழுதப்பட்ட நூல். **(04 புள்ளி)**

(iii)



1. அருகில் காணப்படும் படத்தினைப்பெயரிடுக.
2. இது காணப்படும் விகாரையின் பெயரைத் தருக.
3. இவ் விகாரையை அமைத்த மன்னனின் பெயரைத் தருக.
4. இப்படத்தில் உள்ளவை குறிக்கும் விடையங்களில் ஒன்றினைத் தருக? **(04 புள்ளி)**



kalvi.lk

## பகுதி - II

**(02)**

(i) பின்வரும் வரலாற்று அம்சங்களிற்கு பொருத்தமான விடையை எழுதுக.

A - குளத் தொகுதிக்கு உலர்வலய மக்கள் வழங்கிய பெயர் யாது?

B - 1ஆம் விஜயபாகு பொலநறுவையை தலைநகராக்குவதில் செல்வாக்குச் செலுத்திய துறைமுகம்.

C - யானைப் பிரிவின் தலைவருக்கு வழங்கப்பட்ட பதவிப்பெயர் யாது?

**(03 புள்ளி)**

(ii) பின்வரும் வரலாற்று நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மன்னர்களை அதே ஒழுங்கு முறையில் தருக?

A - இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்

B - கல்வெட்டுக்களில் தன்னை காலிங்க சக்கரவர்த்தி பெருமான் என குறிப்பிட்ட மன்னன்.

C - தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் கிராமங்களிற்கு எல்லை வகுத்த மன்னன்

D - கலிங்க மாகன் படையெடுப்பில் இருந்து இலங்கையை மீட்டெடுத்த மன்னன்

**(04 புள்ளி)**

(iii) கமிகவினால் கிராம மக்களின் நலன் கருதி ஆற்றப்படும் சேவைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

Education கல்வி

(iv) 1ஆம் விஜயபாகு மன்னனின் அரசியல் பணிகள்மூன்றினை குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**

**(03)** (i) பின்வரும் A,B,C என குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்குப் பொருத்தமான விடை தருக.

**A** - இலங்கையின் உள்நாட்டு சந்ததை நிர்வாகம் தொடர்பாகக் கூறுகின்ற கல்வெட்டு எது?

**B** - இலங்கையின் வட பகுதியில் வசபனுடைய ஆட்சி நடவடிக்கைகள் நிலவியமை பற்றிக் குறிப்பிடும் ஆதாரம் எது?

**C** - பல வயல்களைக் கொண்ட பரந்த இடத்தைக் குறிக்க வழங்கப்பட்ட பெயர் யாது? **(03 புள்ளி)**

(ii) பின்வரும் தொழில்களை செய்பவர்களிற்கு கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் பெயர் யாது?

**A** - நூல் நூற்பவர்

**B** - உலோக கைத்தொழில் செய்வோர்.

**C** - மாணிக்கம் அகழ்வோர்.

**D** - தந்த செதுக்கல்

**(04 புள்ளி)**

(iii) பண்டைய இலங்கையில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் சிறப்புற்றிருந்தது என்பதனை ஒவ்வொரு விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**



kalvi.lk

(iv) பண்டைய காலத்தில் பின்வரும் விடயங்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக?

**A -** கல்வி

**B -** இலக்கியமும் இரசனையும்

**(06 புள்ளி)**

**(04)**

(i) வரலாற்றுக்கு முந்திய கால விஞ்ஞான அறிவை எடுத்துக் காட்டும் மூன்று சந்தர்ப்பங்களையும் தருக? **(03 புள்ளி)**

(ii) பின்வரும் A,B,C,D என குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களிற்குப் பொருத்தமான விடைகளைத் தருக.

**A** - குளக்கட்டை பாதுகாக்க உட்புறத்தில் அமைக்கப்படும் கருங்கற்படை எது?

**B** - பாரிய நீர்ப்பரப்பை தாங்கி நிற்க அமைக்கப்படும் முக்கிய உறுப்பு எது?

**C** - கல்வெட்டுக்களில் ரஜமொஹால் எனக் குறிப்பிடப்பட்ட குளத்தின் பகுதி எது?

**D** - குளத்தில் ஏற்படும் நீரின் அமுக்கத்தை கட்டுப்படுத்தும் குளத்தின் உறுப்பு யாது? **(04 புள்ளி)**

(iii) புராதன கால இலங்கையில் குளத்திலிருந்து நீரை கால்வாய்களினூடாக கொண்டு செல்வதில் பின்பற்றப்பட்ட தொழில் நுட்ப முறையை இரு விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

(iv) பண்டைய அநுராதபுர இராசதானியில் நகர நிர்மாணமும் நந்தவன அலங்காரமும் சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதனை பின்வரும் மன்னர்களின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**A-** பண்டு காபயன்

**B -** காசியப்பன் **(06 புள்ளி)**

**(05)**

(i) பின்வரும் விடயங்களிற்கு பொருத்தமான விடையினை A,B,C என்ற அதே ஒழுங்கில் எழுதுக.

**A** - கி.பி 1453 இல் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட முக்கிய வர்த்தக நகரம்.

**B** - தென்கிழக்கு ஐரோப்பாவில் ஐபீரியன் தீபகற்பத்தில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று.

**C** - 1581 இல டிக்கிரி பண்டார 1ஆம் இராஜசிங்கன் என்ற பெயரில் அரசனான இராச்சியம். **(03 புள்ளி)**

(ii) (a) பின்வரும் போர்த்துக்கேயருக்கு எதிரான இரு போர் நடவடிக்கைகளிற்கும் தலைமை தாங்கி வெற்றி பெற்ற இலங்கை மன்னர்கள் யாவர்?

**A -** பலன

**B -** கண்னொறுவ



kalvi.lk

(b) இலங்கையில் பின்வரும் இடங்களில் நடைபெற்ற இரு போர் நடவடிக்கைகளிற்கும் தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதிகள் யாவர்?

**A -** தந்துரே

**B -** ரந்தெனி வெல **(04 புள்ளி)**

(iii) சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணிகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

(iv) *1638, 1766* ஆகிய உடன்படிக்கைகளில் உள்ள இரு நிபந்தனைகளை குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**

**(06)**

(i) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை குறிப்பிடுக.

**A -** *1782* இல் ஹியூபொயிட் என்ற ஆங்கில தூதுவர் இலங்கைக்கு வருகை தந்த போது கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன்.

**B -** *1766* இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கையினை மேற்கொண்ட கண்டி மன்னன்.

**C -** போகம்பரை வாவியை விஸ்தரித்த கண்டி மன்னன் **(03 புள்ளி)**

(ii) டி-மியூரன் குழுவினால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் இரண்டினைக் குறிப்பிடுக? **(04 புள்ளி)**

(iii) பிரித்தானியர் கண்டி இராசதானி மீது படையெடுத்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

(iv) *1803* இல் பிரட்ரிக் நோர்த்தின் கண்டி இராச்சியம் மீதானபடையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**

**(07)**

(i) தெங்குப்பயிர்ச்செய்கையில் முக்கியத்துவம் பெற்ற “தெங்கு முக்கோணப்” பிரதேசங்களைத் தருக. **(03 புள்ளி)**

(ii) பின்வரும் A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்கு பொருத்தமான விடை தருக.

**A -** இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி

**B -** *1931 - 1947* வரையான காலப்பகுதியில் விவசாய அமைச்சராக இருந்தவர் யார்?

**C -** *1972* இல் புதிய அரசியல் யாப்பை அறிமுகப்படுத்திய பிரதமர் யார்?

**D -** சிக்களத்தை அரச கரும மொழியாக்கிய பிரமர் யார்? **(04 புள்ளி)**

(iii) சோல்பரி அரசியல் யாப்பின் முக்கியமான சீர்திருத்தங்கள் இரண்டடினைக் குறிப்பிட்டு விளக்குக. **(05 புள்ளி)**

(iv) இலங்கையில் பிரித்தானியராட்சிக்காலத்தில் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**



kalvi.lk

## பகுதி - III

**(08)**

(i) பிரித்தானியாவில் நிலக்கரிப் படிவுகள் அதிகமாக காணப்படும் மூன்று பிரதேசங்களைக் குறிப்பிடுக? **(03 புள்ளி)**

(ii) கைத்தொழிற் புரட்சியின் போது பின்வரும் உபகரணங்களைக் கண்டு பிடித்தவர்களின் பெயர்களை தருக.

**A -** பாதுகாப்பான விளக்கு

**B -** நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜின்

**C -** மோட்டார் வண்டி

**D -** வானொலி **(04 புள்ளி)**

(iii) கைத்தொழிற் புரட்சியினால் விவசாயத் துறையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினை இரண்டு விடயங்களை குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

(iv) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணங்களை மூன்று விடயங்களை குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**

**(09)**

(i) பின்வரும் சுலோகங்களுடன் தொடர்புடைய புரட்சிகளின் பெயர்களை அதே ஒழுங்கு முறையில் எழுதுக?

**A -** பிரதிநிதித்துவமின்றேல் வரியுமில்லை

**B -** சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

**C -** நிலம், உணவு, சமாதானம் **(03 புள்ளி)**

(ii) A,B,C,D என குறிப்பிடப்படும் சம்பவங்களிற்கு பொருத்தமான விடை தருக?

**A -** 1871 இல் ஜேர்மனியை ஐக்கியப்படுத்தியவர் யார்?

**B -** 1ஆம் உலகப்போர் காலத்தில் பிரித்தானியாவின் பிரதமர் யார்?

**C -** யப்பானில் அணு குண்டு வீசப்பட்ட போது ஜப்பானிய பிரதமர் யார்?

**D -** 2ஆம் உலகப்போர் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி யார்? **(04 புள்ளி)**


(iii) 1ம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக? **(05 புள்ளி)**

(iv) இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? **(06 புள்ளி)**




kalvi.lk

**1.** (அ) (i)



*1.* (அ) (ii)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page